**27.01.2026**

**அ.வ.எண். 83/2020**

**வா.சா.2 – திரு. பிச்சையா, த/பெ.சுப்பிரமணியம், (கட்டிட பொறியாளர் / மதிப்பீட்டாளர்)**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 27.01.2026 is accordance with the provision of Act X of 3331

**1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பொதுப்பணித்துறையில் பணிபுரியவில்லை. நான் கட்டிட பொறியாளர் / மதிப்பீட்டாளர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேண்டுமென்றால் தாக்கல் செய்வேன். நான் கோயம்புத்தூரில், மீனா எஸ்டேட்டில் குடியிருந்து வருகிறேன். அலுவலகம் ராமநாதபுரத்தில் உள்ளது. எனது அலுவலகம், வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கும் சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும். நான் வழக்கு சொத்திற்கு அடிக்கடி சென்று பார்க்கவில்லை. வழக்கு சொத்தை 2 -3 மாதங்களுக்கு முன்பாக பார்த்தேன். வழக்குசொத்தை பார்வையிட நீதிமன்றத்தில் இருந்து எனக்கு உத்தரவு வரவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுகொண்டதன் பேரில் வழக்கு சொத்தை பார்வையிட்டேன் என்றால் சரிதான்.

2. வாதி, பொதுவாக எந்த மாதிரி தொழில் செய்வார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அன்று ஒரு நாள் பார்த்தேன். தினமும், வாதி எந்த மாதிரி நடைமுறையில் தொழில் செய்வார் என்றால் சரிதான். பொதுவாக, M-sand இருப்பு வைத்திருக்கும்போது தண்ணீர் தெளிக்காமல் இருக்கும்போது காற்றில் பறக்கும் என்றால் சரிதான். காற்றில் M-sand பறக்கும் என்றால் 6.25 மைக்ரான் அளவில் காற்றில் பறக்கும். வாதி, என்ன மைக்ரான் அளவுள்ள M-sand பயன்படுத்துகிறார் என்றால் தெரியாது. நான் போனபோது, சிமெண்ட்டை வாதி ரூமில் வைத்திருந்தார் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், வாதி, எங்கு சிமெண்ட்டை தினந்தோறும் வைத்திருப்பார் என்று என்னால் சொல்ல முடியாது.

3. வாதி என்ன பரிகாரம் கோருகிறார் என்று தெரியாது. வாதி கோரியுள்ள பரிகாரத்திற்கும் என்னுடைய சாட்சியத்திற்கும் சம்மந்தமில்லை

என்றால் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும், நான் என்னுடைய கருத்துரையை சொல்கிறேன். எனது சாட்சியம் ஏற்றுகொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur